**இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம்- 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் (“பல்கலைக்கழகம்”) 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பல்கலைக்கழகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை

இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு பல்கலைக்கழகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பல்கலைக்கழகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- பல்கலைக்கழகம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- பல்கலைக்கழகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது

குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ''திட்டமிட்டு பேணுதல்'' நிறுவனங்களிற்கு அவசியமாக உள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 50 ஆம் பந்தியின் பிரகாரம் ரூபா 104,464,552 தொகையான ஏனைய சொத்துக்களின் கிரயம் நிறுவனத்தின் செயற்பாடுகளில் ஒரே தன்மையான சொத்துக்கள் அல்லது அல்லது தொழிற்பாடுகளின் தொகுப்பாக்கப்படாமல் ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | ஏனைய சொத்துக்களின் வகைப்படுத்தல் பட்டோலையிலுள்ள பக்க இலக்கம் 201 இல் கொடுக்கப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள் பின்பற்றப்படுதல். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நிலையான சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. ரூபா 536,453,179 கிரயமான ஆதனம், பொறி மற்றும் உபகரணம் முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியளவில் இன்னும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட தவறை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நியமத்தின் பிரகாரம் சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்வதற்கு குழுக்கள் நியமனம் செய்யப்பட்டு வருகின்றன. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள் பின்பற்றப்படுதல். |
| (இ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 43, 45 மற்றும் 72 ஆம் பந்திகளின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் 11 இடங்களிலுள்ள ஏறத்தாழ 210 ஹெக்டெயர் காணி | ஈயூஎஸ்எல் இற்குச் சொந்தமான காணியின் உரிமைத்துவத்தை பெற்றுக்கொள்ளுதல் மற்றும் கட்டிடங்களின் மீள்மதிப்பீட்டு செயன்முறை என்பன | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள் பின்பற்றப்படுதல். |

| | | |
|---|---|---|
| பெறுமதியிடப்பட்டு நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. | |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | குறுங்கால முதலீட்டிலிருந்தான ரூபா 18,894,941 தொகையான வட்டி வருமானம் வருமானமாக இனங்காணப்படாமல் நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறையல்லா பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்ட வரையறுக்கப்பட்ட நிதியத்தின் (restricted fund) கீழ் காட்டப்பட்டிருந்தது. இதன் விளைவாக மீளாய்வாண்டிற்கான மிகை ரூபா 3,198,334 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் நிதிக்கூற்றுக்களில் பொது ஒதுக்கம் மற்றும் வரையறுக்கப்பட்ட நிதியம் என்பன ரூபா 18,894,941 ஆல் முறையே குறைத்தும் அதிகரித்தும் காட்டப்பட்டிருந்தன. | சபையின் அங்கீகாரத்துடன் நடவடிக்கை எடுக்கப்படும். | சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பெறுமானத்தேய்வு கொள்கையின் பிரகாரம் கட்டிடங்கள் 5 சதவீதத்தில் பெறுமானத்தேய்விடப்பட வேண்டிய போதிலும் ரூபா 3,666,316 கிரயமான நோயியல் ஆய்வுகூடம் (Pathology Laboratory) 10 சதவீதத்தில் பெறுமானத்தேய்விடப்பட்டிருந்தது. இதன் விளைவாக நிதிக்கூற்றுக்களில் திரண்ட பெறுமானத்தேய்வு ரூபா 1,283,156 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | இது தற்போது சீர்செய்யப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களில் அதிகரித்துக் காட்டப்பட்ட பெறுமதியை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | ரூபா 4,060,132 கூட்டுத்தொகையான 3 வங்கிக் கணக்குகளிலுள்ள நேரடியான வரவுகள் நிதிக்கூற்றுக்களில் செலவினமாக இனங்காணப்படாமல் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் இனங்காணப்படாத வரவுகளாக | பதிவாளரால் நியமனம் செய்யப்பட்ட குழுவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் எல்லையினுள் இம் மீதிகளை பதிவளிப்பு செய்வதற்கு அங்கீகாரம் பெறப்படுதல் மற்றும் கணக்கீட்டு | இனங்காணப்படாத வரவுகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| காட்டப்பட்டிருந்தன. | உத்தியோகத்தரின் அங்கீகார எல்லைக்கு அப்பாலுள்ள மீதிகளிற்காக பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கான கோரிக்கையொன்று சமர்ப்பிக்கப்படுதல். | |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 3 தொடக்கம் 38 ஆண்டுகள் வரையான காலவீச்சில் 71 விரிவுரையாளர்களால் உடன்படிக்கைகள் மீறப்பட்டதன் காரணமாக ரூபா 155,332,578 தொகையான மொத்த பிணைமுறிப் பெறுமதி அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 10 ஆண்டுகளினுள் வழக்குகள் தொடர்பான சட்ட நடவடிக்கை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. 2020.12.19 ஆம் திகதிய சபைக் கூட்டத்தின் பிரகாரம் பிணைமுறிகளை மீறியவர்களிற்கு 920 ஆம் இலக்க ஆணைக்குழுச் சுற்றறிக்கையின் பிரகாரம் கோரிக்கை கடிதங்களை அனுப்புவதற்கு தீர்மானிக்கப்பட்டது. | விரிவுரையாளர்களிடமிருந்து அல்லது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு தாமதமாவதற்கு பொறுப்பான உத்தியோகத்தர்களிடமிருந்து பிணைமுறிப் பெறுமதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) பதவியணியினரிற்கான கடன் மற்றும் முற்பணங்களிலிருந்து பெறவேண்டிய ரூபா 20,839,969 கூட்டுத்தொகையான மீதிகள் மற்றும் மூன்றாம் தரப்பினர்களிடமிருந்து பெறவேண்டிய ரூபா 84,161,724 பெறவேண்டிய மீதிகள் என்பன 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவீடு செய்யப்படாமல் 03 தொடக்கம் 15 ஆண்டுகள் வரையான காலவீச்சில் நிலுவையாக காணப்பட்டன. | தகவல்களை கண்டுபிடிக்கக்கூடியதாக உள்ளதால் 2010 இன் பின்னர் தீர்ப்பனவு செய்யப்படாத முற்பணங்களிற்காக தீர்ப்பனவு செயன்முறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அங்கு 2010 இற்கு முன்னர் தகவல்களை கண்டுபிடிக்க இயலாதவை COPE இற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. ஆகையால் உரிய அதிகாரிகளின் அங்கீகாரத்துடன் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பதவியணியினர் மற்றும் மூன்றாம் தரப்பினர்களிடமிருந்து பெறவேண்டியவைகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நடைமுறைப் பொறுப்பான ரூபா 20,810,414 கூட்டுமொத்தமான சில்லறை கடன்கொடுத்தோர் மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகளிற்காக பல்கலைக்கழகத்தால் செலுத்த வேண்டிய மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு 03 தொடக்கம் 15 ஆண்டுகள் வரையான காலவீச்சில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டியவைகளில் சில பத்து ஆண்டுகளிற்கு மேலாக முன்கொண்டு வரப்பட்டதுடன் அவற்றிற்காக நாங்கள் தொடர்புடைய ஆவணங்களை கொண்டிருக்கவில்லை. எனினும் கணக்குப் புத்தகங்களிலிருந்து தெளிவுபடுத்துவதற்கு அவை தொடர்பில் பல்கலைக்கழகம் பணியாற்றுகின்றது. | செலுத்த வேண்டியவைகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் பேன்றவற்றுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் - நி.பி. 371 | வழங்கப்பட்ட கட்டுநிதி நிதியாண்டின் திசெம்பர் 31 இற்கு முன்னர் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும் அல்லது மீளளிக்கப்பட வேண்டும். எனினும் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது பல்கலைக்கழகத்தின் 10 பதவியணியினரிற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 994,306 கூட்டுமொத்தமான முற்பண கொடுப்பனவு 2021 யூன் 23 வரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | உரிய பதவியணியினரிடமிருந்து பெறவேண்டியவைகளை அவர்களது சம்பளத்திலிருந்து அறவீடு செய்வதற்கு 2020 திசெம்பர் 19 ஆம் திகதிய சபை தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றதுடன் பதவியணியினர் எவராவது முன்னர் மேற்கொள்ளப்பட்ட தீர்ப்பனவிற்கான ஆவணச்சான்றினை கொண்டிருந்தால் ஏடுகளிலிருந்து அவர்களது பெயர்களை நீக்கிக்கொள்ள முடியும் | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் தாபன விதிக்கோவை
-------------------------------

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | VII ஆம் அத்தியாயத்தின் 02 (XV) ஆம் பிரிவு, 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவு மற்றும் 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் 8.2.2 ஆம் பிரிவு | ரூபா 104,088,440 கூட்டுமொத்தமான முதலீடு தொடர்பாக நிதி அமைச்சு மற்றும் கல்வி அமைச்சின் இணக்கப்பாடு மற்றும் முன் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட மாதிரியின் பிரகாரம் முதலீட்டுப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | நிதி ஆணைக்குழுவின் பரிந்துரை மற்றும் அங்கீகாரத்துடனும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவு மற்றும் 2003.06.02 ஆம் திகதிய பிஈடி 12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் 8.2.2 ஆம் பிரிவு என்பவற்றின் பிரகாரமும் மாத்திரமே அனைத்து முதலீடுகளும் மேற்கொள்ளப்பட வேண்டும். | உரிய சுற்றறிக்கைகளுடன் இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | XX ஆம் அத்தியாயத்தின் 3(1) ஆம் பிரிவு மற்றும் 2017 யூலை 10 ஆம் திகதிய 10/2017 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை கடிதம் | அனைத்து கல்விசார் பதவியணியினரும் அவர்களது வருகை மற்றும் வெளிச்செல்லல்களை கைவிரல் அடையாளத்தை பதிவுசெய்யும் இயந்திரத்தில் பதிவுசெய்ய வேண்டிய போதிலும் கல்விசார் பதவியணியினர் அதனுடன் இணங்கியிருக்கவில்லை. | மரபொன்றாக ஏனைய பல்கலைக்கழகம் அனைத்திலும் உள்ளவாறு கல்விசார் பதவியணியினர் அவர்களது வரவை பதிவுசெய்வதில்லை. எனினும் பெரும்பாலான அனைத்து துறைகளும் அவர்களது உரிய துறைகளில் உள்ள வருகைப் பதிவேட்டில் வருகைதந்தமைக்காக கையொப்பமிட்டிருந்தனர். | வருகை மற்றும் வெளிச்செல்லல்களை பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | 2013 ஏப்ரல் 10 ஆம் திகதிய 04/2013 ஆம் இலக்க தாபன சுற்றறிக்கை கடிதம் மூலம் திருத்தப்பட்டவாறு XXVI ஆம் அத்தியாயத்தின் 3 ஆம் பிரிவு | மீளாய்வாண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அது தொடர்பான அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு 2021 மார்ச் 17 இல் அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அத்தகைய அறிக்கை 2021 யூன் 21 வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 2019 ஆம் | பொருள் மெய்மையாய்வு உரிய காலத்தில் ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. எனினும் கொவிட் தொற்றுநோய் காரணமாக இறுதியாக்கல் தாமதமாகியிருந்ததுடன் இது எதிர்வரும் வாரம் அளவில் சமர்ப்பிக்கப்படும். இப் பற்றாக்குறைகள் தொடர்பான | சுற்றறிக்கைகளின் பிரகாரம் பொருள் மெய்மையாய்வு அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் ரூபா 1,379,602 கிரயத்திலான 139 பொருளிருப்பு உருப்படிகளின் பற்றாக்குறை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிரச்சனையை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | |
| (இ) | தேசிய நூலக மற்றும் ஆவணமாக்கல் சபையின் 2016 திசெம்பர் 22 ஆம் திகதிய 2004/எல்டி/1 ஆம் இலக்க சுற்றறிக்கை | நூலக புத்தகங்களின் வருடாந்த இருப்பு மெய்மையாய்வு பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து நடாத்தப்பட்டிருக்கவில்லை. | தற்போது கிட்டத்தட்ட 98,000 புத்தகங்கள் மற்றும் பருவ இதழ்களை நூலகம் கொண்டுள்ளது. இருப்பு மெய்மையாய்வு செயன்முறைகள் 3 ஆண்டுகளிற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் இப் பணியை பூர்த்தி செய்வதில் பல தடைகள் காணப்பட்டன. இந் நிலைமை இயல்பு நிலைமைக்கு திரும்பினால் மிகுதிப் பணி துரிதப்படுத்தப்படும். | சுற்றறிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 291,444,058 பற்றாக்குறையொன்றாக இருந்ததுடன் ஒப்பிடும் போது அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 576,266,345 ஆக இருந்ததால் நிதி விளைவுகளில் ரூபா 284,822,287 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. பெறுமானத்தேய்வு மற்றும் காலக்கழிவு செலவினங்கள் ரூபா 213,733,657 ஆல் குறைவடைந்தமை மற்றும் ஒப்பந்த சேவைகள் ரூபா 30,629,921 ஆல் குறைவடைந்தமை என்பன இம் முன்னேற்றத்திற்கான காரணங்காளாக பிரதானமாக பங்களித்திருந்தன.

### 2.2 விகிதப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டின் இறுதியில் பல்கலைக்கழகத்தின் நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 1,259,560,040 தொகையானதுடன் நடைமுறைப் பொறுப்புக்கள் ரூபா 132,674,003 ஆக காணப்பட்டன. அதற்கிணங்க நடைமுறை விகிதம் 9:1 ஆகவும் நியம விகிதம் 2:1 ஆகவும் காணப்பட்டன. ஆகையால் பல்கலைக்கழகம் நடைமுறைப் பொறுப்புக்களில் ஒவ்வொரு ரூபா 1 இற்கும் நடைமுறைச் சொத்துக்களில் ரூபா 9 ஐக் கொண்டிருந்ததுடன் அதன் நடைமுறைப் பொறுப்புக்கள் நியமத்தின் பிரகாரம் 2 தடவைகளிற்கு பதிலாக 9 தடவைகள் மேவுகை செய்யப்பட்டிருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டின் போது மீள்கொள்வனவு (Repo) வைப்பிலிருந்து மேலதிக வருமானமொன்றாக திருகோணமலை வளாகத்தால் ரூபா 2,164,630 தொகை உழைக்கப்பட்டிருந்தது. வளாகத்தால் மீள்கொள்வனவு வைப்பில் முதலீடு செய்யும் சாத்தியம் காணப்பட்ட போதிலும் மீளாய்வாண்டின் போது அத்தகைய மேலதிக வருமானத்தை ஈட்டுவதற்கான முயற்சியை அறிக்கைத் திகதிவரையிலும் முகாமைத்துவம் எடுத்திருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டின் போது திறைசேரியிலிருந்து மூலதன மானியம் 2020 பெப்ரவரியில் பெறப்பட்டதுடன் இம் மானியத்திலிருந்து பட்டியல்கள் வழங்கப்பட்டிருந்தது. அத்துடன் கொவிட் 19 நிலைமை காரணமாக அலுவலக பணிகள் ஒழுங்கான அடிப்படையொன்றில் இடம்பெற்றிருக்காததுடன் திறைசேரி வழமை போன்று நிதியை விடுவித்திருக்கவில்லை. ஆகையால் ஒரே இரவில் வைப்புக்களை தொடர முடியாதிருந்தது. எனினும் எதிர்காலத்தில் நிதிகளின் கிடைப்பனவின் பிரகாரம் மீள்கொள்வனவு முதலீட்டிற்காக தொடரப்படும். | நிதிகளின் கிடைப்பனவின் பிரகாரம் மீள்கொள்வனவு வைப்பிலிருந்து மேலதிக வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 சர்ச்சைத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| விரிவுரையாளர்களிற்கான கல்விசார் படிக் கொடுப்பனவின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை கருத்தில் கொள்ளாமல் 1988 யூலை 13 ஆம் திகதிய 21/88 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையை அடிப்படையாகக் கொண்டு பயங்கரவாத வன்முறை காரணமாக 2004 இல் இறந்த விரிவுரையாளரின் தங்கியிருப்போரிற்கு 2004 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 யூன் மாதம் வரை ரூபா 10,892,078 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | பின்னர் திருத்தப்பட்டவாறு 1988.07.13 ஆம் திகதிய 21/88 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் இறந்த ஊழியரின் தங்கியிருப்போரிற்கு அவரது ஓய்வுபெறும் வயதை அடையும் காலம் வரை அவரால் பெறப்படக்கூடிய சம்பளம் மற்றும் ஏனைய படிகள் செலுத்தப்பட வேண்டும். மேற்படி ஏற்பாடுகளின் பிரகாரம் 2004 இல் இறந்த ஊழியரின் தங்கியிருப்போரிற்கு சம்பளம் மற்றும் படிகளை நாங்கள் செலுத்தியிருந்தோம். | கல்விசார் படிகளை வழங்குவதன் குறிப்பிட்ட நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.3 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய நிதிகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கிழக்குப் பல்கலைக்கழகம் மற்றும் திருகோணமலை வளாகத்தில் கடந்த 3 ஆண்டுகளாக விளைவற்றிருந்த ரூபா 1,336,416 தொகையான பொருளிருப்புக்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பராமரிப்பு பிரிவு தேவை ஏற்படும் போதெல்லாம் இப் பொருட்களை பயன்படுத்துவதுடன் இயன்ற வரை விரைவாக நியமனம் செய்யப்பட்ட குழுவின் பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு அசைவற்ற நுகரத்தக்க பொருளிருப்புக்களிற்காக நடவடிக்கை எடுக்கப்படும். | பொருளிருப்புக்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.4 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கல்விசார் பதவியணிக்காக 285 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் காணப்பட்டதுடன் கல்விசார் பதவியணியினரின் உள்ளபடியான எண்ணிக்கை 218 ஆக காணப்பட்டதால் வெற்றிடங்களின் எண்ணிக்கை 67 ஆக உள்ளதுடன் அதில் 15 சிரேஷ்ட பேராசிரியர் பதவிகளிற்கு சொந்தமான வெற்றிடங்களாகும். கல்விசாரா பதவியணியினரில் உள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை 120 ஆகும். பல்கலைக்கழகம் நாளதுவரையிலும் வெற்றிடங்களை நிரப்பியிருக்கவில்லை. | பல சந்தர்ப்பங்களில் கல்விசார் பதவிகளை காலரீதியாக விளம்பரப்படுத்துவதற்கு பல்கலைக்கழகம் நடவடிக்கையை எடுத்திருந்தது. பொருத்தமான விண்ணப்பதாரிகளில் உள்ள மட்டுப்பாடுகள் குறிப்பிடத்தக்க பிரச்சனையொன்றாகும். வருகை விரிவுரையாளர்களை நியமனம் செய்வதன் மூலம் உருவாக்கப்பட்ட வெற்றிடத்தை நாங்கள் முகாமை செய்கின்றோம். | மேலதிக தாமதமின்றி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

# 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்காக 07 செலவின விடயங்கள் தொடர்பாக பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவினங்களுக்கிடையே 07 சதவீதம் தொடக்கம் 309 சதவீதம் வரையிலான வீச்சில் குறிப்பிடத்தக்களவு முரண் அவதானிக்கப்பட்டதால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்காதமையை சுட்டிக்காட்டுகின்றது. | பாதீடு தயாரிக்கும் போது எதிர்பார்க்கப்பட்டிருக்காத சூழ்நிலை மற்றும் முன்னுரிமை அடிப்படையில் உண்மையான தேவைகளிற்கு செலவினங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், 2019 ஆம் ஆண்டில் கட்டளையிடப்பட்ட பொருட்கள் 2020 இலேயே பெறப்பட்டன. இது உண்மையான செலவினங்களை அதிகரித்தது. | பாதீட்டு முரண்களை இழிவுபடுத்துவதற்கும் நிதியேற்பாடுகளை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |